# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313274

1. District : மாவட்டம் Ranipet PS: Vigilance & Anti Corruption காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 9/2026 முத.அ. எண் Date: 23.9.2026 நாள்

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act, 1988 as amended by The PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: u/s 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.9.2026 Date to : நாள் வரை –
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் – Time to : நேரம் வரை prior to 15.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.9.2026 Time : நேரம் 15.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-III Time : நேரம் 23.9.2026 15.00 hrs & 16.00 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் – written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் – Arakkonam Municipality, Arakkonam, Ranipet District North East 60 Kms
Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி –

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. D. Jegadeeswaran (b) Father's/ Husband's Name : Duraisamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 51 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் Deputy ECO (g) Address : முகவரி Inspection Cell office, Vellore Ranipet Tirupathur and T.V.Malai Districts Collectorate Campus, Vellore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tmt. M. Saroja (58/2026), Municipal Engineer, Tiruvallur Municipality Tiruvallur District, I/c Arakkonam Municipality, Ranipet District
(2) Tr. Premsundar (47/2026), Overseer, Arakkonam Municipality
(3) Tr. M. Naresh (35/2026), Record Clerk, Arakkonam Municipality, Ranipet District.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
– No delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

22/9/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

22/9/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.09.2026 @ 17.00 hrs

Name: பெயர் V. Ganesan,
Rank: நிலை .....No. எண் .....
Deputy Supdt. of Police,
Vigilance & Anti-corruption,
Ranipet.

**Attachment in Column No. 12 of FIR in Ranipet V&AC Cr.No.09/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது. இன்று 23.09.2026-ஆம் தேதி மதியம் சுமார் 15.00 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.D.ஜெகதீஸ்வரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு:- நாள்: 23.09.2026 அனுப்புநர் D.ஜெகதீஸ்வரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. அய்யா, பொருள்: இராணிப்பேட்டை மாவட்டம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை - அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் கடந்த 22.09.2026 அன்று மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான புகார் சமர்ப்பித்தல் - தொடர்பாக. கடந்த 22.09.2026 பகல் சுமார் 11.30 மணிக்கு, எனக்கு இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் புதிய குடிநீர் இணைப்பு, கட்டிட அனுமதி, சொத்து வரி வசூல், பிறப்பு இறப்பு சான்றிதழ், மனைப்பிரிவு ஒப்புதல் ஆகியவற்றிற்காக அரக்கோணம் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக நகராட்சி அலுவலக ஊழியர்கள் அவரவர் பதவிக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காகவும், பொது மக்களிடமிருந்து நேரடியாகவும், வங்கி கணக்கு மூலமாகவும் கையூட்டாக பணம் பெறுவதாக நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி தகவலை நான் என்னுடைய தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய தங்களுக்கு பகல் சுமார் 12.30 மணிக்கு தகவல் தெரிவித்து, சுமார் 13.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்து குழுவினருடன் புறப்பட்டு, அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை மேற்கொள்ள பகல் 15.00 மணிக்கு சென்று சேரப்பட்டு, இருதுறை திடீர் கூட்டுசோதனை ஆரம்பிக்கப்பட்டது. இருதுறை திடீர் கூட்டுச்சோதனையின்போது, அரக்கோணம் நகராட்சி ஆணையர் அறையை பார்க்க, அங்கு நகராட்சி ஆணையர் இல்லாததால், அங்கிருந்த மற்ற அலுவலர்களிடம் நகராட்சி பொறியாளர் யார் என கேட்க அப்போது பொறியாளர் அறையிலிருந்து ஒரு பெண்மணியை காண்பித்து இவர்தான் தற்போது பொறுப்பு நகராட்சி பொறியாளர் என கூறினர். பின்னர் அவரிடம் என்னையும், காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கணேசன் அவர்களையும், மற்றும் சோதனைக்குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு, அடையாள அட்டைகளை

காண்பித்து, அரக்கோணம் நகராட்சி அலுவலகத்திற்கு சோதனைக்கு வந்துள்ள நோக்கம் தெரிவிக்கப்பட்டது. பின்னர், இருதுறை திடீர் கூட்டுச்சோதனைக்கு சென்ற அலுவலர்களாகிய நாங்கள் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு, எங்களிடம் எந்த பணமும் இல்லை என்பதை உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், நகராட்சி பொறியாளரிடம் நகராட்சி ஆணையரை பற்றி விசாரிக்க, அதற்கு அவர் அரக்கோணம் நகராட்சி ஆணையர் திரு.ஆனந்தன் அவர்கள், நகரமைப்பு அலுவலர் திரு.R.ரவி மற்றும் திரு.ராஜசேகர், இளநிலை உதவியாளர், F-1 இருக்கை ஆகியோர்களுடன் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு சென்றிருப்பதாக கூறினார். பின்னர், அவரை விசாரிக்க, அவர் தனது பெயர் M.சரோஜா எனவும், தான் திருவள்ளூர் நகராட்சி பொறியாளர் எனவும், அரக்கோணம் நகராட்சி பொறியாளர் பணியிடம் காலியாக இருப்பதால், தான் கடந்த 26.03.2026 ஆம் தேதி முதல் அரக்கோணம் நகராட்சி பொறியாளர் பொறுப்பையும் கூடுதலாக கவனித்து வருவதாகவும், வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள் மட்டும் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்திற்கு வந்து நிலுவை பணிகளை பார்த்துவிட்டு செல்வதாகவும் சொனனார். பின்னர், பொறியாளர் திருமதி.சரோஜா அவர்களை உதவி ஆய்வாளர் திருமதி.சௌபர்னிகா அவர்கள் மூலம் மறைவிடத்தில் வைத்து சோதனை செய்ய, அவரது செல்போன் பவுச்சில் பணம் ரூ.770/- இருந்தது. அந்த பணம் குறித்து அந்த பணம் தனது சொந்த பணம் என்றும், தனது செலவிற்காக எடுத்து வந்ததாக சொன்னதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது கைபேசியை வாங்கி அதிலுள்ள Gpay-ஐ சோதனை செய்ய மேற்படி Gpay –ஆனது அவருடைய கைபேசி எண்.9790759183 என்ற எண்ணுடன் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி எண்ணானது பாரத ஸ்டேட் வங்கி, அரும்பாக்கம் கிளை வங்கி கணக்கு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதாக சொன்னார். மேற்படி கணக்கில் வங்கி கணக்கு பரிவர்த்தனைகளை சோதனை செய்ய கடந்த 15.05.2026 அன்று 9884292574 – Baskar Ponnan, (Maintenance Contractor) என்பவரிடமிருந்து ரூ.30,000/-, 14.05.2026 அன்று 8122309393 – Simon Jas (Contractor) என்பவரிடமிருந்து ரூ.40,000/-, 22.04.2026 அன்று 9080499947– Mohammed Ali என்பவரிடமிருந்து ரூ.14,000/-, 10.04.2026 அன்று 9840837243– Ananthasayanam (Ration Shop Contractor) என்பவரிடமிருந்து ரூ.25,000/-, 10.04.2026 அன்று 9380000637- Kannan (Electrician) என்பவரிடமிருந்து ரூ.24,000/-, ஆக மொத்தம் மேற்படி தேதிகளில் மொத்தமாக ரூ.1,33,000/- பெறப்பட்டிருந்தன. அதற்கான விளக்கம் கேட்டபோது திருமதி.சரோஜா அவர்கள், தான் அவர்களுக்கு கடனாக பணம் கொடுத்திருக்கலாம் அதை அவர்கள் மேற்படி தேதியில் தனக்கு திருப்பி அளித்திருக்கலாம் என்றும் தனக்கு தற்போது நியாபகம் இல்லை என்றும் சொன்னார்.

மேற்படி திருமதி.சரோஜா அவர்கள் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லை. பின்னர், அந்த அலுவலகத்தின் பொதுமக்கள் சேவை மைய அறை சோதனை செய்ய, அந்த அறையில் பணம் எதுவும் இல்லை. அந்த அறையை அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தும் திரு.நரேஷ், பதிவறை எழுத்தர் என்பவரின் கைபேசியை வாங்கி அதிலுள்ள Gpay -ஐ சோதனை செய்ய மேற்படி Gpay –ஆனது அவருடைய கைபேசி எண்.8056080131 என்ற எண்ணுடன் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி எண்ணானது அரக்கோணம் கிளை இந்தியன் வங்கி கணக்கு எண்.916640113 உடன் இணைக்கப்பட்டுள்ளதாக சொன்னார். மேற்படி கணக்கில் வங்கி கணக்கு பரிவர்த்தனை சோதனை செய்ய, கடந்த 10.09.2026 அன்று ரூ.5,000/-, 09.09.2026 அன்று ரூ.45,000/-, 08.09.2026 அன்று ரூ.50,000/- விஜயலட்சுமி என்பவரிடமிருந்தும், 11.07.2026 அன்று ரூ.10,000/- அரிகிருஷ்ணன் (9994194560) என்பவரிடமிருந்தும் ஆக மொத்தம் ரூ.1,10,000/- பெறப்பட்டுள்ளது. அரிகிருஷ்ணன் என்பவர் நகராட்சி ஆணையாளரின் ஓட்டுனராக இருப்பதாகவும் அவரிடம் ரூ.1,00,000/- கடனாக கேட்டதாகவும், அவர் விஜயலட்சுமி என்பவருடைய எண்ணிலிருந்தும், அவருடைய எண்ணிலிருந்தும் தனக்கு மேற்படி பணத்தை அனுப்பியதாக தெரிவித்தார். மேற்படி பரிவர்த்தனைகள் குறித்து திரு.நரேஷ் அவர்கள் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லை. பின்னர், அவ்வலுவலகத்தின் நீண்ட வராண்டாவின் இருபுறமும் உள்ள அறைகளில், கண்ணாடி தடுப்புகளால் ஆன முதல் அறையான மேலாளர் நாகூர்மீரான்ஒலி என்பவரின் அறையை சோதனை செய்ய, பணம் எதுவும் இல்லை. அவர் 22.09.2026 முதல் ஈட்டிய விடுப்பில் சென்றுள்ளதாக நகராட்சி பொறியாளர் சொன்னார். பின்னர், அந்த அறையை அடுத்துள்ள கணக்காளர் திரு.சாதிக் அலி, அதற்கு அடுத்த A-1 அறையான இளநிலை உதவியாளர் அகஸ்தியா அவர்களுடைய அறைகளை சோதனை செய்ய, பணம் எதுவும் இல்லை. அவர்கள் மதிய உணவிற்காக சென்றிருப்பதாக நகராட்சி பொறியாளர் சொன்னார். அதற்கு அடுத்த C-1 இளநிலை உதவியாளர் திவ்யதாரணி என்பவர் அறை, B-3 இளநிலை உதவியாளர் அன்னபூரணி மற்றும் ஜெராக்ஸ் அறையை சோதனை செய்ய, பணம் ஏதும் இல்லை. அதற்கடுத்து பூட்டியிருந்த ஸ்டேஷ்னரி அறையை திறக்க சொல்லி, சோதனை செய்ய, அந்த அறையில் பணம் எதுவும் இல்லை. மேற்படி பொதுப்பிரிவில் இருந்த அலுவலர்களை சோதனை செய்தபோது, திருமதி.Y.திவ்யதரணி, இளநிலை உதவியாளர், (Establishment Section), திருமதி.M.ராணி, இளநிலை உதவியாளர்/காசாளர், .திருமதி.B.அன்னபூரணி, இளநிலை உதவியாளர், B-3 Section, செல்வி.C.R.திவ்யாராணி, நகரமைப்பு ஆய்வாளர், செல்வி.P. பிராங்ளினா, Assistant Technician for Censes (Town Planning Section), திரு.M.நரேஷ், Record Clerk, திரு.R.ராஜசேகர், உதவியாளர் ஆகியோர் அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால், அவை அவர்களிடமே திரும்ப

ஒப்படைக்கப்பட்டது. பின்னர், மேற்படி கழிவறையை அடுத்து பூட்டியிருந்த பதிவறையை திறக்க சொல்லி, சோதனை செய்ய, பணம் எதுவும் இல்லை. பின்னர் அந்த பதிவறையை அடுத்திருந்த பொறியாளர் பிரிவில் இருந்த அறைகளில் இருந்த உதவி பொறியாளர் திரு.வினோத்ராஜ், பொது பணி மேற்பார்வையாளர் திரு.பிரேம்சுந்தர், படவரைவாளர் திரு.நாகராஜ், பணி ஆய்வாளர் திரு.ஜெயசூரியன், தொழில்நுட்ப உதவியாளர் (தற்காலிக பணியாளர்) திரு.மதன்குமார் ஆகியோர்களின் மேஜை இழுவறைகள், பீரோக்கள் ஆகியவற்றை சோதனை செய்ய, அங்கு பணம் எதுவும் இல்லை. மேற்படி பொறியியல் பிரிவில் இருந்த மேற்படி அலுவலர்களை சோதனை செய்தபோது, அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவர்களின் கைபேசியை வாங்கி இணையதள பரிவர்த்தனைகளை சோதனை செய்ய, அதில் திரு.பிரேம் சுந்தர், பணி மேற்பார்வையாளர் என்பவரின் கைபேசியில் Gpay-ஐ சோதனை செய்ய மேற்படி Gpay– ஆனது அவருடைய கைபேசி எண்.9840280296 என்ற எண்ணுடன் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி எண்ணானது HDFC அரக்கோணம் கிளை வங்கி கணக்கு எண்.18591000020193 உடன் இணைக்கப்பட்டுள்ளதாக சொன்னார். மேற்படி கணக்கில் வங்கி கணக்கு பரிவர்த்தனை சோதனை செய்ய கடந்த 14.07.2025 அன்று 9940214729- Mohan Consultant Water Supply என்பவரிடமிருந்து ரூ.25,000/-, மேலும் 9443193567 - Ramesh Babu (Road Work Contractor) என்பவரிடமிருந்து 14.07.2025 அன்று ரூ.50,000/-, 12.07.2025 அன்று ரூ.99,500/-, 02.07.2025 அன்று ரூ.50,000/-, 25.06.2025 அன்று ரூ.20,000/-, 23.06.2025 அன்று ரூ.40,000/-, 23.06.2025 அன்று ரூ.20,000/- ,15.06.2025 அன்று ரூ.50,000/, 10.06.2025 அன்று ரூ.25,000/-, 26.05.2025 அன்று ரூ.25,000/-, 24.05.2025 ரூ.5,000/-, 08.05.2025 அன்று ரூ.30,000/- , 06.05.2025 அன்று ரூ.20,000/-, 9629655964 Srinath Reddy (கடை வைத்திருப்பவர்) என்பவரிடமிருந்து 14.05.2026 அன்று ரூ.12,000/-, 9443417792 PMR Manikandan (Planner) என்பவரிடமிருந்து 07.03.2025 ரூ.50,000/- ஆக மொத்தம் ரூ.5,21,500/- பெறப்பட்டுள்ளது. மேற்படி திரு.பிரேம்சுந்தர், பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்களிடம் மேற்படி வரவுகளுக்கான காரணம் குறித்து விசாரிக்க அவர் தனக்கு இருதய அறுவை சிகிச்சை 2023 ஆம் ஆண்டு செய்யப்பட்டதாகவும், அதற்காக மேற்படி திரு.ரமேஷ்பாபு என்பவரிடமிருந்து கடனாக பணத்தை பெற்று ஏற்கனவே வாங்கிய கடனை கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேற்படி திரு.பிரேம்சுந்தர் அவர்கள் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லை. பின்னர் நகராட்சி ஆணையாளர் அறையினை சோதனை செய்ய, அந்த அறையில் பணம் எதுவும் இல்லை. அந்த அறையின் வெளியே பொதுமக்கள் சேவை மையம் அருகில் இருந்த படிகட்டின் வழியே

முதல்தளத்திற்கு சென்று பார்க்க முதலில் நகராட்சியின் நகர மன்ற தலைவர் திருமதி.லட்சுமி பாரி அவர்களின் அறையும், அதை ஒட்டி இருந்த கூட்ட அரங்கமும் பூட்டப்பட்டு இருந்தது. பின்னர், நகராட்சி அலுவலகத்தின் மெயின் கட்டிடத்திற்கு மேற்கு பக்கம் உள்ள வருவாய் பிரிவில் மேற்கு பக்கம் இருந்த அறையில் இருந்த திரு.சுந்தர், Revenue Assistant / Bill Collector, அரக்கோணம் நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் சொன்னதால், அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையை சோதனை செய்ய, பணம் ஏதும் இல்லை. பின்னர், வராண்டாவிற்கு வடக்கு பக்கம் இருந்த இரண்டு அறைகளையும் சோதனை செய்ய, பணம் ஏதும் இல்லை. பின்னர் அந்த அறைகளுக்கு கிழக்கு பக்கம் இருந்த அறையை சோதனை செய்ய, பணம் ஏதும் இல்லை. பின்னர் வருவாய் பிரிவு அலுவலகத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ள வரி வசூல் செய்யும் அறையில் இருந்த திருமதி.ராணி, இளநிலை உதவியாளர்/காசாளர் என்று சொன்னார். அந்த அறையை சோதனை செய்ய, பணம் எதுவும் இல்லை. பின்னர் அவரிடம் 22.09.2026 தேதி செய்த வரிவசூல் குறித்து கேட்க, அவர் இன்றைய மொத்த வரிவசூல் ரூ.3,17,017/- என்றும் அதில் ஆன்லைன் வசூல் ரூ.76,150/- என்றும் ரொக்க வசூல் ரூ.2,40,867/- என்று தெரிவித்து அதனுடைய பிரிண்ட் அவுட் ஒன்றை எடுத்து காண்பித்தார். பின்னர் அந்த கணினி மேஜையில் இருந்த இழுவறையை சோதனை செய்ய அதில் பணம் ரூ.2,31,467/- இருந்தது. பின்னர் அவரிடம் மீதம் ரூ.9,400/- குறித்து கேட்க 02.09.2026 அன்று தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ் என்ற கடையின் பில்லை காண்பித்து, மக்கள் தொகை கணக்கெடுப்பு சம்ம்நதமான விளம்பர பேனர் தயார் செய்ததற்காக மேற்படி தொகையை ஆணையாளர் அரக்கோணம் நகராட்சி அவர்கள் உத்தரவுபடி திரு.புகழேந்தி, Fitter என்பவரிடம் அந்த தொகையை கொடுக்குமாறு சொன்னதாகவும் இன்று மாலையே அந்த தொகையை திருப்பி கொடுத்துவிடுவதாகவும் சொன்னதால், தான் அந்த தொகையை புகழேந்தியிடம் கொடுத்ததாக தெரிவித்தார். பின்னர் அவருடைய கைபேசி மூலம் ஆணையாளரை தொடர்பு கொண்டு பேசிய போது அவரும் அதையே தெரிவித்தார். பின்னர் நகராட்சி பொறியாளர் திருமதி.சரோஜா அவர்களிடம் அலுவலக பொதுப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளின் வருகை பதிவேடுகளை கேட்க, அவர் அந்த பதிவேடுகளை ஆஜர் செய்தார். மேற்படி வருகைப்பதிவேடுகளின் முதல் மற்றும் பதிவுகள் இருந்த கடைசி பக்கங்களில் நானும், நகராட்சி பொறியாளர் திருமதி.M.சரோஜா மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் ஆகியோர் கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. பின்னர் நகராட்சி பொறியாளரிடம் பணியாளர் கையிருப்பு பதிவேடு குறித்து கேட்க அந்த பதிவேட்டை தாங்கள் பராமரிக்கவில்லை என்று சொன்னார். மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனை, 22.09.2026 ஆம் தேதி 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இருதுறை திடீர்

கூட்டுச்சோதனை செயல்முறையில் நானும், காவல் துணை கண்காணிப்பாளர், நகராட்சி பொறியாளர் திருமதி.M.சரோஜா ஆகியோர் கையொப்பம் செய்தோம் அதன் நகல்கள் திருமதி.M.சரோஜா, நகராட்சி பொறியாளர், திருவள்ளூர் நகராட்சி, பொறுப்பு: நகராட்சி பொறியாளர், அரக்கோணம் நகராட்சி, திரு.S.பிரேம் சுந்தர், பணி மேற்பார்வையாளர், அரக்கோணம் நகராட்சி மற்றும் திரு.M.நரேஷ், பதிவறை எழுத்தர், அரக்கோணம் நகராட்சி ஆகியோர்களுக்கு கொடுக்கப்பட்டது. மேலும், 1) திருமதி.M.சரோஜா, நகராட்சி பொறியாளர், திருவள்ளூர் நகராட்சி, பொறுப்பு: நகராட்சி பொறியாளர், அரக்கோணம் நகராட்சி, 2) திரு.S.பிரேம் சுந்தர், பணி மேற்பார்வையாளர், அரக்கோணம் நகராட்சி மற்றும் 3) திரு.M.நரேஷ், பதிவறை எழுத்தர், அரக்கோணம் நகராட்சி ஆகியோர்களின் கைபேசி மின்னணு பணப்பரிவர்த்தனை பதிவுகள் மற்றும் பிற சூழ்நிலை ஆதாரங்கள் ஆகியவற்றை பார்க்கும்போது, 1) திருமதி.M.சரோஜா, நகராட்சி பொறியாளர், திருவள்ளூர் நகராட்சி, பொறுப்பு: நகராட்சி பொறியாளர், அரக்கோணம் நகராட்சி, 2)திரு.S.பிரேம்சுந்தர், பணி மேற்பார்வையாளர், அரக்கோணம் நகராட்சி மற்றும் 3)திரு.M.நரேஷ், பதிவறை எழுத்தர், அரக்கோணம் நகராட்சி ஆகியோர் தன்னுடன் பணிபுரியும் அலுவலர்களிடமிருந்தும், இடைத்தரகர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்றிருக்கக்கூடும் என தெரிய வருகிறது. எனவே மேற்படி மூன்று அலுவலர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் கடந்த 22.09.2026 ஆம் தேதி நடத்திய இருதுறை திடீர் கூட்டுச்சோதனையில் கைப்பற்றப்பட்ட இரண்டு பதிவேடுகள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய Sd/-xxxxxxx 23/9/2026 (து.ஜெகதீஸ்வரன்)

Sir, Received the complaint on 23.9.2026 at 15.00 hrs and a case in Ranipet V&AC Cr.No.09/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act,1988 as amended by the PC (Amendment) Act 2018 was registered on 23.09.2026 at 16.00 hrs. Sd/-xxxxx 23/9/26 Dy. Supdt. of Police, V&AC, Ranipet.

The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble Principal District and Sessions Judge / Special Judge, Ranipet and sent the copies to the officers concerned.

23/09/2026

Deputy Superintendent of Police
Vigilance & Anti Corruption
Ranipet District.